# THE RELATIONSHIP OF SECONDARY SCHOOLS' STUDENTS DROP OUT AND PARENTAL ACTIVITIES – MANMUNAI SOUTH ERUVIL PATTU.

LIBRARY
24 MAR 2011
Eastern University, Sri Lanka.

By
THILLAIVINAYAGAM THAYALAN
EU/IS/04/ac/06

DISSERTATION SUBMITTED FOR THE PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENT FOR THE DEGREE OF BACHELOR OF EDUCATION THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.

DEPARTMENT OF EDUCATION&CHILD CARE,
FACULTY OF ARTS& CULTURE,
EASTERN UNIVERSITY,
SRILANKA,

2010.

FAC46
Project Report
Library - EUSL

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

மாணவர்களின் தொடர்ச்சியான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளுக்கு பெற்றோரின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகின்றது. மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதோடு அவர்களது நடத்தையையும் நல்வழிப்படுத்தும் பொறுப்பும் பெற்றோருடையதாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளின் கற்றலுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதில் பெற்றோர் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அதேநேரம் பெற்றோரின் அக்கறையற்ற செயற்பாடுகளின் காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியினை இடைநடுவில் விடுகின்ற நிலை ஏற்படுகின்றது. இவ்வாய்வின் மூலம் இடைநிலைப் பிரிவில் இடைவிலகும் மாணவர்களின் இடைவிலகலுக்கான பெற்றோரின் செயற்பாடுகளைக் கண்டறிந்து மாணவர்களது தொர்ச்சியான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளுக்கு பெற்றோர் பின்பற்ற வேண்டிய வகிபங்குகளை மேம்படுத்துவதற்கான விதந்துரைப்புகள் முன்வைக்கப் படுகின்றது.

மாணவர்களது இடைவிலகலுக்கு பெற்றோரின் பல செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளது. தமது பிள்ளை வீட்டில் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமை, போதிய வருமானமின்மை, வறுமையான குடும்ப சூழல், பிள்ளைகள் கற்பதற்கான ஊக்குவிப்புகள் வழங்காமை, பிள்ளைகளை தொழிலுக்கனுப்புதல், பிள்ளைகளை உறவினர் பொறுப்பில் விட்டு வெளிநாடு செல்லல், போதைப் பொருள் பாவனையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும், பாடசாலை நிர்வாகத்துடனான தொடர்பின்மை, கல்வியின் முக்கியத்துவம் உணராமை, பிள்ளைகளின் நடத்தைகளை கண்காணிக்காமை, திட்டமிடாத வாழ்கை செலவு முறை, பிள்ளைக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை உரிய நேரத்துக்கு பெற்றுக் கொடுக்காமை, பெண் பிள்ளைகள் உயர் வகுப்பு கற்க விரும்பாமை போன்ற பெற்றோர் செயற்பாடுகளினால் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகும் நிலை தவிர்க்க முடியாததாகின்றது. எனவே இவ்வாய்வுப் பிரச்சினை ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

இவ்வாய்வானது ஒரு அளவைநிலை ஆய்வாக ஒழுங்கமைக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனை தென்எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 1AB, 1C பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோரும் மாதிரி தெரிவாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, பேட்டி காணல், அவதானம் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டு எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் மாணவர் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் பெற்றோர் செயற்பாடுகள், இடைவிலகும் மாணவர்களின் தொடர்ச்சியான பாடசாலைக் கல்வி

தொடர்பில் பெற்றோரின் மனப்பாங்கு, இடைவிலகும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர், பாடசாலைச் சமுகம் ஆகியோரின் பங்கு, மாணவர்கள் தொடர்ச்சியாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபட பெற்றோரின் ஒத்துதுழைப்பு போன்ற ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும், அளவு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகளும் விதந்துரைப்புகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இடைவிலகிய மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியை பெற விருப்பமுடையவர்களாக இருந்தும் தமது பெற்றோரின் செயற்பாடுகள், அக்கறையற்ற மனப்பாங்கு காரணமாக பாடசாலைக் கல்வியை தொடர முடியாது விலகுகின்றனர். பிள்ளைகள் சிறப்பான கண்காணிப்பின்றி வளர்க்கப்பட்டு கட்டிளமை வயதையடையும் போது பிரச்சனைக்குரிய நடத்தையில் ஈடுபட்டு பாடசாலையை விட்டு விலகும் நிலை ஏற்படுகின்றது. மேலும் பெற்றோரினால் தேவையான வசதிகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமையினால் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாது விடுகின்றனர். பெற்றோருக்கு கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்துதல், பிள்ளையின் கற்றல் - கற்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்க ஆலோசனை வழங்குதல், தாய்மார் கல்விமுறையினை அறிமுகம் செய்தல், கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் மூலம் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோரின் பொறுப்பினை தெளிவு படுத்தலாம்.

ஆய்வாளன்.

# பொருளடக்கம்


பக்கம்

DECLARATION i

உறுதிமொழி ii

நன்றியுரை iii

மேற்பார்வையாளர் சான்றிதழ் iv

ஆய்வுச்சுருக்கம் v

அட்டவணைகள் xi

உருக்கள் xii


## முதலாம் அத்தியாயம்


1.0 **ஆய்வு அறிமுகம்** ..........01

1.1 அறிமுகம் ..........01

1.2 ஆய்வின் பின்னணி ..........02

1.3 பிரச்சினையும் அதன் பகுப்பாய்வும் ..........02

1.4 ஆய்விற்கான நியாயம் ..........04

1.5 ஆய்வுக் கருவிகள் ..........05

1.6 ஆய்வு நோக்கம் ..........07

1.7 ஆய்வு வினா ..........07

1.8 ஆய்வு முறையியல் ..........07

1.9அரும் சொற்பங்கள் ..........08

1.10 ஆய்வின் முக்கியத்துவம் ..........10

# இரண்டாம் அத்தியாயம்

2.0 இலக்கிய மீளாய்வு ....................................................................11

2.1 அறிமுகம் ....................................................................11

2.2 கற்றலும் கற்றலின் முக்கியத்துவமும் ....................................................................11

2.3 கற்றல் வரையறைகள் ....................................................................12

2.4 கற்றல் நோக்கங்கள் ....................................................................14

2.5 தனிமனித நோக்கம் ....................................................................14

2.6 சமுக நோக்கங்கள் ....................................................................15

2.7 கல்வியின் நான்கு தூண்கள் ....................................................................18

2.8 மாணவர்களுக்கு கற்றலில் நாட்டமுட்டல் ....................................................................20

2.8.1 தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதில் பெற்றோரின் பங்கு ....................................................................21

2.9 மாணவர்கள் செய்ய வேண்டியவை ....................................................................22

2.10 கட்டாயக் கல்வியின் அவசியம் ....................................................................23

2.11 மாணவர்கள் இடைவிலகல் ....................................................................24

2.12 கற்றலைப் பாதிக்கும் காரணிகள் ....................................................................25

2.12.1 குடும்பம் ....................................................................26

2.12.2 பாடசாலை ....................................................................27

2.12.3 சகபாடிக் குழுக்கள் ....................................................................23

2.12.4 சமுகம் ....................................................................28

2.12.5 பொருளாதாரம் ....................................................................24

2.12.6 கலாசாரம் ....................................................................24

2.13 போதிய உள்ளீடு இன்மை ....................................................................24

2.14 ஊடகங்கள் ....................................................................29

2.15 எதிர்பாராத நிகழ்வுகள் ....................................................................30

2.16 உளவியல் அம்சங்கள் ....................................................................30

2.17 இடைவிலகலுக்கான காரணிகள் ........................................31

2.18 பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் செல்வாக்கு ..................... .....33

2.19 பாடசாலைகளும் பெற்றோரும் ........................................40

2.20 கல்வியில் ஈடுபாடுகொண்ட பெற்றோரின் இயல்புகள் .....................41

2.21 பெற்றோர் பொறுப்பினை உறுதி செய்தல் ................................44

2.22 இலங்கையின் கல்வியில் இடைவிலகல் ..................................46

2.23 பாடசாலைகள் ஏன் குடும்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும் ...............50

2.24 பாடசாலைக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பினை
மேம்படுத்துவதற்கான சில தீர்வுகள் ......................................51

2.25 வாசிக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் ........................................52

2.25.1 மாணவர் இடைவிலகல் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கம்..................52

2.25.2 மாணவர் இடைவிலகலுக்கான காரணங்கள் ............................53

2.25.2.1 தீர்வுகள் ......................................................54

## மூன்றாம் அத்தியாயம்

3.0 ஆய்வு முறைமையியல் ................................................55

3.1 அறிமுகம் ..........................................................55

3.2 ஆய்வுப் பிரதேசம் ....................................................56

3.3 ஆய்வுப் பிரச்சினை ..................................................57

3.4 மாதிரியெடுப்பு ......................................................58

3.6 தரவுப் பகுப்பாய்வு ...................................................59

## நான்காம் அத்தியாயம்

4.0 தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும் ....................................................60

4.1 அறிமுகம் ....................................................................................................60

4.2 இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் பெற்றோர் செயற்பாடுகள் பற்றிய வினாக்களின் பகுப்பாய்வு ....................................................................................61

4.3 இடைவிலகும் மாணவர்களின் கல்வி தொடர்பாக அவர்களின் பெற்றோர் கொண்டுள்ள மனப்பாங்கினை கண்டறிதல் வினாக்களின் பகுப்பாய்வு ......74

4.4 இடைவிலகும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அதிபர் ஆசிரியர்களின் பங்களிப்பு பற்றிய வினாக்களின் பகுப்பாய்வு ...........................86

4.5 மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக விருப்புடன் ஈடுபட பெற்றோருடைய பங்களிப்பினை கண்டறிதல் வினாக்களின் பகுப்பாய்வு......94

4.6 நேர்காணல் வினாக்களின் பகுப்பாய்வு ...............................................................96

## ஐந்தாம் அத்தியாயம்

5.0 முடிவுகளும் விதந்துரைப்புகளும் ..........................................................102

5.1 அறிமுகம் ....................................................................................................102

5.2 முடிவுகள் ....................................................................................................102

5.3 விதந்துரைப்புகள் .......................................................................................... 104

5.4 எதிர்காலத்தில் தொடர இருக்கும் ஆய்வுக்கான ஆலோசனைகள் .......107

உசாத்துணை நூல்கள் 108

சஞ்சிகைகள் 109

பத்திரிகைகள் 110

ஆய்வுகள் 110